www.Padasalai.Net www.TrbTnpsc.com



# முழுப் பாடத்திட்டத் தேர்வு – 2

## பன்னிரண்டாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரை : 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

### பகுதி - அ

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14x1=14

**ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. ' புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே ' என்று கூறியவர்

அ) காலின் மெக்கன்சி ஆ) எட்கர் ஆலன்போ இ) மார்லன் பிராண்டோ ஈ) டேவிட் கிங்

3. தமிழில் திணைப்பாகுபாடு .................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

4. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. தவறான இணையைத் தேர்க.

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள் வெண்பா | - | திருக்குறள் |

6. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

7. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சுதல்

8. ' ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் ' என்று கூறும் நூல்

அ) தமிழ்விடு தூது ஆ) தண்டியலங்காரம் இ) காரிகை ஈ) சிந்தாமணி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



9. 'சிறாஅர்' இலக்கணக்குறிப்பு

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசையளபெடை

இ) சொல்லிசையளபெடை ஈ) பெயரெச்சம்

10. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

11. பொருத்துக.

i) ஆமந்திரிகை - 1. பட்டத்து யானை

ii) அரசு உவா - 2. மூங்கில்

iii) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்

iv) கழை - 4. எடை அளவு

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1

12. தோப்பில் முகமது மீரானின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூல்

அ) சாய்வு நாற்காலி ஆ) துறைமுகம்

இ) கூனன் தோப்பு ஈ) ஒரு குட்டித்தீவின் வரைபடம்

13. சின்னையா கணேசனுக்குச் சிவாஜி கணேசன் எனப் பெயரிட்டவர்

அ) அண்ணாதுரை ஆ) கலைஞர் கருணாநிதி இ) தந்தை பெரியார் ஈ) பாலச்சந்திரன்

14. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

## பகுதி - ஆ

### பிரிவு - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3x2=6

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

16. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

17. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2x2=4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. மணந்தகம் - குறிப்பு வரைக.

21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.** 7x2=14

22. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து தொடரமைக்க.

அ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

ஆ) குமரன் வீடு பார்த்தேன்.

23. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

அ) கிணற்றுத் தவளை போல

ஆ) ஆணி அடித்தாற் போல

24. சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

விட்டான்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
    ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

26. பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க.
    ஊண் - ஊன்

27. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) கலங்கி ஆ) பேசுவார்

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) உள்ளொன்று ஆ) இனநிரை

30. கலைச் சொல்லாக்கம் தருக.
    அ) File ஆ) Debit Card

## பகுதி - இ

### பிரிவு - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2x4=8

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
32. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
33. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள் நெறி நின்று விளக்குக.
34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2x4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3x4=12

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விவரி.

*(அல்லது)*

ஆ) "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- கவிமணி தேசிக விநாயகம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

42. தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

43. பின்வரும் பழமொழியை வாழ்வியல் நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) மின்னுவதெல்லாம் பொன்னல்ல

(அல்லது)

ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்

**பகுதி - ஈ**

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3x6=18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

**பகுதி - உ**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

47. அ) 'காய்நெல்'... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'நோய்' என முடியும் குறட்பாவை எழுதுக.

♦♦♦♦♦

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com